இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையம்
கொள்கைச் சுருக்கம்

INTERNATIONAL CENTRE FOR ETHNIC STUDIES

# நகர்வில்: பால்நிலையும் இலங்கையில் பருவகால மீன்பிடிக் குடிப்பெயர்வும்

## முக்கிய தகவல்கள்

- மேற்குக் கரையோரப்பகுதியிலிருந்து கிழக்கு, வட-கிழக்கு கரையோரப் பகுதிகளுக்கு தென்மேற்கு பருவப்பெயர்ச்சிக் காலப்பகுதியில் (ஏப்ரல் - செப்டம்பர்) இடம்பெறும் குடிப்பெயர்வே இலங்கையில் காணப்படும் பருவகால மீன்பிடிக் குடிப்பெயர்வின் பிரதான ஒழுங்குமுறையாகும். அது 19ம் நூற்றாண்டு காலப்பகுதியிலிருந்து இடம்பெற்றுவருகின்றது.
- இந்த உள்நாட்டு கரையோரத்திலிலிருந்து - கரையோரத்திற்கான குடிப்பெயர்வு இலங்கையின் பருவக்காற்று வானிலை ஒழுங்குமுறைகளை எதிர்கொள்வதற்கான இசைவாக்க வாழ்வாதார மூலோபாயமாகும்.
- பருவகால மீன்பிடிக் குடிப்பெயர்வானது வறுமையினாலோ அல்லது வளப்பற்றாக்குறையினாலோ உந்தப்படுவதல்ல. மாறாக அது நல்வாழ்க்கையை தேடிக் கொள்வதற்கான வாய்ப்பினாலேயே உந்தப்படுவதுடன் சமூக வலையமைப்புகளினால் இயலுமானதாக்கப்படுகின்றது.
- பெரும்பாலான குடிப்பெயர்வாளர்கள் ஆண்களாக இருக்கின்றபோதும் பெண்துணைகளும் பெண் குடும்ப உறுப்பினர்களும் கூட பருவகாலக் குடிப்பெயர்வில் பங்கேற்கின்றனர்.
- இலங்கையின் கரையோர மீன்பிடி வளங்களின் அழிவு, கிழக்குக் கரையோரத்தில் மீன்பிடி குடும்பங்களின் அதிகரிப்பு, போருக்குப் பின்னரான அரசியல்-பொருளாதார காரணிகள் ஆகியவற்றின் காரணமாக மீன்பிடி வளங்களை பெற்றுக்கொள்வது தொடர்பாக குடிபெயரும் சமுதாயங்களுக்கும் இடமளிக்கும் சமுதாயங்களுக்குமிடையில் உருவாகும் முரண்பாடுகள் அதிகரித்துள்ளன.
- குடிப்பெயர்வுக்கான தமது பாரம்பரிய உரிமை என்ற வகையிலும் மேற்குக் கரையோர மீனவ சமுதாயங்களாலும் தமது உள்ளூர் வளங்களுக்கான தமது உரிமை என்ற வகையிலும் இரு தரப்பினாலும் போட்டித்தன்மை வெளிப்படுத்தப்படுகின்றது.
- குடிப்பெயர்வானது குடிபெயரும் சமுதாயங்களுக்கும் இடமளிக்கும் சமுதாயங்களுக்கும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வெவ்வேறான பயன்களையும் செலவுகளையும் கொண்டுவந்து சேர்க்கின்றது.
- புதிய “இலங்கையின் மீன்பிடி, மீன்வளர்ப்பு கொள்கை 2018” பால்நிலை ஏற்றத்தாழ்வு, சிறிய மட்ட மீனவர்களின் நிலப்பிடிமான உரிமை ஆகியவற்றை கவனிப்பதற்கான முக்கியமான முதற் படியை எடுத்து வைத்துள்ளது. ஆனாலும் குடிப்பெயர்வு, பால்நிலை தொடர்பான பிரச்சினைகளுக்கு பதிலளிப்பதில் நிலைமாறு தன்மை இன்னும் போதுமானதாக இல்லை.
- மீன்பிடி வளங்கள் கிடைக்கப்பெறுவதில் நியாயமான தன்மையே முக்கிய கவனம்பெறும் விடயமாக மீனவர்களுக்கு இருக்கின்றது.



### மீன்பிடி வளங்கள் கிடைக்கப்பெறுவதற்கான உரிமை

- *அங்கு (கிழக்கு / வட-கிழக்கு கரையோரங்கள்) மீன்பிடிப்பது பரம்பரை பரம்பரையாக எங்களது பாரம்பரிய உரிமை. அரசாங்கம் அதை ஏற்றுக்கொள்கின்றது. அக் கிராமங்களிலுள்ள சில மக்களின் உதவியோடு நாங்கள் அங்கு செல்கின்றோம்* (ஆண்கள் மையக்குழு கலந்துரையாடல், கடல்பள்ளி, புத்தளம்).
- *இங்குள்ள மீனவர்களுக்கு குடிபெயர் மீனவர்களுடன் பிரச்சினை உள்ளது. முதலாளிகளே (வர்த்தகர்கள்) அவர்களிடமிருந்து இலாபமடைகின்றனர். அங்கு எந்த கட்டுப்பாடுகளும் இல்லை. சிலவேளை அவர்கள் 300 படகுகளை கொண்டுவருகின்றனர். அதனால் அது உள்ளூர் மக்களுக்கு பிரச்சினையாக மாறுகின்றது. எங்களால் எப்படி மீன்பிடிக்க முடியும்? இந்தக் கடலில் 300 படகுகளுக்கே மீன்பிடிக்க முடியும். 1000 படகுகள் இருந்தால் எங்களால் எப்படி மீன்பிடிக்க முடியும்?* (ஆண்கள் மையக்குழு கலந்துரையாடல், செழிப்பூர், திருகோணமலை)






வறுமையிலிருந்து விடுபடுவதற்கான வழிவகையாக குடிப்பெயர்வும் கூட்டிணைவுகளும வலையமைப்புகளும்: ஆசியாவிலுள்ள மீனவ சமுதாயங்களின் பால்நிலையால் தீங்கிற்குள்ளாகக்கூடிய நிலையும் இயலுமைகளும் என்ற மூன்று நாடுகளில் இடம்பெறும் ஆய்வுச் செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாக இலங்கையில் முன்னெடுக்கப்படுகின்ற ஆய்வின் கொள்கைச் சுருக்கம் இதுவாகும். குடிபெயர்வோரை அனுப்பிவைக்கும் புத்தளம் மாவட்டத்திலுள்ள இரு மீன்பிடி சமுதாயங்கள் மீதும் அவர்களை பெறுகின்ற திருகோணமலை மாவட்டத்திலுள்ள இரு மீனவ சமுதாயங்கள் மீதும் இந்த ஆய்வு கவனம் செலுத்தியுள்ளது. இந்த ஆய்வின் கண்டுபிடிப்புகள் 800 வீடுகளில் மேற்கொள்ளப்பட்ட அளவறி கருத்தறிதல் மூலமும் நான்கு கிராமங்களில் பாவிக்கப்பட்ட பண்பறி முறைமைகள் மூலமும் உருப்பெற்றன. மேலதிகமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் கரையோர சமுதாயங்களைச் சேர்ந்த பெண் தலைமைத்துவ குடும்பங்கள் ஒரு பண்பறி ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. பொருண்மிய, தொடர்புடைய, அகவயமான பரிமாணங்களை ஒருங்கிணைத்தமைந்த சமூக நல்வாழ்க்கை அணுகுமுறையே குடிப்பெயர்வின் உந்துதல்களையும் விளைவுகளையும் புரிந்துகொள்வதற்கான பகுப்பாய்வு சார்ந்த வில்லையாக பாவிக்கப்பட்டது.

### பருவகால மீன்பிடி குடிப்பெயர்விற்கான காரணங்கள்

ஆய்வு நடாத்தப்பட்ட கடல்பள்ளி*, சட்டியூர்* ஆகிய கிராமங்களில் அனைத்து செலவு மட்டங்களையும் சேர்ந்த குடும்பங்களிலிருந்து சுமார் 75% ஆன குடும்பங்கள் அடிப்படையாக திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களின் கிழக்கு, வட-கிழக்கு கரையோரங்களுக்கு உள்நாட்டு பருவகால குடிபெயர்வில் ஈடுபட்டுவருகின்றனர். பணியாட்கள், கரைவலை தொழிலாளர்கள், இழையூடு வலிதாக்கப்பட்ட பிளாஸ்டிக் படகில் தொழில்புரியும் மீனவர்கள் ஆகியவர்களில் பெரும்பாலானோர் ஆண்களாக காணப்பட்டனர். ஏனைய பெண்களைவிட படகினை கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் (பெண் துணைகள், பெண் குடும்ப உறுப்பினர்கள்) பெரும்பாலும் குடிபெயர்வதுடன் கருவாடு உலர்த்தும் பணியில் ஈடுபடுவார்கள். பருவப்பெயர்ச்சி இல்லாத காலப்பகுதியில் கிழக்கு கரையோர மீன்வளத்தை குறிவைத்து மீன்பிடி மூலம் தமது வாழ்வாதாரத்தை தொடர்ந்து ஈட்டிக்கொள்வதற்கான இசைவாக்க மூலோபாயமாகவும் அவர்களது பேரன் பேர்த்திகளது காலத்திலிருந்தான பாரம்பரியமாகவும் மேற்கு கரையோர மீனவர்கள் பருவகால குடிப்பெயர்வை கருதுகின்றனர். கரையோரத்திலிருந்து கரையோரத்திற்கான மீன்பிடி குடிப்பெயர்வுகள் 150 ஆண்டு காலமாக இடம்பெற்றுவந்ததை காலனித்துவக் கால ஆவணங்கள் வெளிப்படுத்துகின்றன.




### அட்டவணை 1: ஆய்வு கிராமங்களிலுள்ள மீனவ குடும்பங்களில் மீன்பிடிக்கான உள்ளக குடிப்பெயர்வாளர்கள்

| கி. உ. பிரிவு | ஆண்கள் | | பெண்கள் | | குடிபெயர் குடும்பங்கள் | | அனைத்து குடும்பங்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | சூ | மீனவ குடும்பங்களின் மூ ஆக | சூ | மீனவ குடும்பங்களின் மூ ஆக | சூ | மீனவ குடும்பங்களின் மூ ஆக | சூ | % |
| **மேற்கு கரையோரம் (புத்தளம் மாவட்டம்)** | | | | | | | | |
| கடல்பள்ளி | 145 | 76.3 | 71 | 37.4 | 146 | 76.8 | 190 | 100 |
| சட்டியூர் | 113 | 72.4 | 16 | 10.3 | 115 | 73.7 | 156 | 100 |
| இரு கிராமங்களும் | 258 | 74.6 | 87 | 25.1 | 261 | 75.4 | 346 | 100 |
| **கிழக்கு கரையோரம் (திருகோணமலை மாவட்டம்)** | | | | | | | | |
| உப்புக்கடல் | 23 | 19.0 | 0 | 0 | 23 | 19.0 | 121 | 100 |
| செழிப்பூர் | 6 | 4.2 | 0 | 0 | 6 | 4.2 | 142 | 100 |
| இரு கிராமங்களும் | 29 | 11.0 | 0 | 0 | 29 | 11.0 | 263 | 100 |
| அனைத்தும் | 287 | 47.1 | 87 | 14.3 | 290 | 47.6 | 609 | 100 |

(ஆதாரம்: குடும்பங்களின் வாழ்வாதாரங்கள் மதிப்பீடு 2017)
ஆய்வு கிராமங்களின் பெயர்கள் புனையப்பட்டுள்ளது.

மேற்குக் கரையோர மீனவ குடும்பங்களின் உள்நாட்டு பருவகால குடிப்பெயர்வை கிழக்கு கரையோர உப்புக்கடல்*, செழிப்பூர்* கிராமங்களைச் சேர்ந்த இடமளிக்கும் சமுதாயங்களைச் சேர்ந்த மீனவர்கள் தங்களது கரையோர மீன் வளங்களை பெற்றுக்கொள்வதற்காக பேராசையினால் உந்தப்படுவதாக கருதுகின்றனர். கிழக்கு கரையோரத்தைச் சேர்ந்த ஆய்வுக்குட்படுத்தப்பட்ட கிராமங்களிலிருந்து 11% ஆன மீனவர்கள் மட்டுமே அதே கரையோரத்தில் இன்னொரு இடத்திற்கு தங்களது பருவகாலத்தில் குடிபெயர்ந்தனர். ஆகையால் குடிப்பெயர்வு வறுமையினாலோ அல்லது வளப் பற்றாக்குறையாலோ உந்தப்படவில்லை மாறாக அது வாய்ப்புத் தேடலினாலேயே உந்தப்படுகின்றது.

## இயலுமானதாக்குவதும் செயலிழக்கச் செய்வதுமான காரணிகள்

சிறு குழுக்களாக குடிபெயரவும் விட்டுச் செல்லப்படுகின்ற குடும்ப உறுபினர்களை கவனிக்கவும் கிராமத்தினுள் காணப்படுகின்ற சமூக வலையமைப்புகளின் வலிமையும் அடித்தளமாக இருக்கின்ற குடிப்பெயர்வு கலாச்சாரமும் மேற்கு கரையோர சமுதாயங்களில் காணப்படும் பருவகால மீன்பிடி குடிப்பெயர்வை இயலுமானதாக்குகின்றது. அனுசரணையாளர்களாக செயற்படுகின்ற மீன் வர்த்தகர்களுடனான தொடர்புகளும் இக்கட்டானது. மீன்பிடி திறன்கள், மீன்களின் குடிப்பெயர்வு தொடர்பான அறிவு, இடமளிக்கும் கிராமங்களில் தொடர்புகொள்வதற்கான மொழித் திறன்கள் ஆகியவை இயலுமானதாக்கும் காரணிகளாகும். சொந்த கிராமங்களிலுள்ள சிறுவர்களின் பராமரிப்பு, கல்வி ஆகியவற்றுடன் அரச அதிகாரபீடங்களினாலும் இடமளிக்கும் சமுதாயங்களாலும் விதிக்கப்படும் கட்டுப்பாடுகளும் அதிகரிக்கும் எதிர்ப்பும் செயலிழக்கச் செய்வதுமான காரணிகளாகும். வெளிநாட்டிற்கு குடிபெயர்ந்த குடும்ப உறுப்பினர்களிடமிருந்து அந்நியச் செலாவணியை பெற்றுக்கொள்ளும் குடும்பங்களும் தமது கிராமங்களில் நிரந்தர வருமானத்திற்கான ஆதாரங்களை கொண்ட குடும்பங்களும் பெரும்பாலும் பருவகால உள்ளக குடிப்பெயர்வில் ஈடுபடுவதில்லை.

தெற்கிலிருந்தாலான அரசியல் மற்றும் அரச ஆதரவு, உள்ளூர் அரசியல்வாதிகளின் பலவீனம், தங்களது மீனவ சமூகங்களுக்கிடையில் ஒற்றுமையின்மை ஆகியவை கிழக்குக் கரையோரத்தை நோக்கிய குடிபெயர்வினை இயலுமானதாக்குவதாக கிழக்குக் கரையோர மீனவர்கள் கருதுகின்றனர். கடற்கரையில் படகுகளை தரிப்பதற்கான இடநெருக்கடியும் இடமின்மையும் குடிப்பெயர் வருகைக்கான செயலிழக்கச் செய்யும் காரணிகளாக உள்ளன. மாவட்டத்திற்குள் ஒருங்கிணைந்து மீனவ சமூகங்களாக வேலை செய்வதற்கான அவர்களது இயலுமையும் குடிப்பெயர் வருகையை செயலிழக்கச் செய்வதாக பார்க்கப்படுகின்றது. ஆகையினால் குடிப்பெயர்வை இயலுமானதாக்குவதிலும் செயலிழக்கச் செய்விதிலும் உறவுக் காரணிகள் இரு கரையோரங்களிலும் முக்கியமானதாக இருந்ததுடன் அவற்றை தொடர்ந்து பொருண்மியக் காரணிகள் இருந்தன.

மேற்குக் கரையோர மீனவர்களின் குடிப்பெயர்வு பாரம்பரியத்திற்கான உரிமையின் அடிப்படையில் அமைந்ததும் கிழக்கு கரையோர மீனவர்களது உள்ளூர் வளங்களின் மீதான உரிமையின் அடிப்படையில் அமைந்ததுமான மீன்பிடி வளங்களை பெற்றுக்கொள்வதற்கான போட்டி பருவகால குடிப்பெயர்வின் தொடர்ச்சிக்கு சவாலாக அமைகின்றது. குடிபெயர்ந்து வருகின்ற மீனவர்களும் இடமளிக்கின்ற மீனவர்களும் வெவ்வேறான இன-மத குழுக்களைச் சேர்ந்தவர்களாக இருப்பதனால் இந்த முரண்பாடுகள் இனம் அல்லது மதம் சார்ந்தவைகளாக மாறக்கூடிய சாத்தியமுள்ளது.

## பயன்களும் இடர்களும்

ஒப்பீட்டளவில் கிழக்கு / வட-கிழக்கு மீன்பிடியிலிருந்து அதிக வருமானத்தை பெறுவதும் கடன்களை அடைப்பதும் மேற்கு கரை சமுதாயங்களை சேர்ந்த ஆண்களுக்கும் பெண்களுக்கும் கிடைக்கும் பயனாகும். குடிபெயரும் பெண்கள் கருவாடு உலர்வித்தல் மூலம் வருமானத்தைப் பெறுகின்றனர். ஆண் மீனவர்களும் சுற்றுச்சூழல் மாற்றத்தையும் நட்பையையும் நம்பிக்கையையும் குடிபெயர்ந்து இருக்கின்ற இடங்களில் பெறுமதியானதாக கருதுகின்றனர். எதிர்பார்த்த வருமானம் எப்போதும் கிடைக்கப்பெறாமை, அதனால் விளையும் மேலதிக கடன்கள், இடமளிக்கும் சமுதாயத்தினருடனான முரண்பாடுகளால் மீன்பிடி சொத்துக்களுக்கு ஏற்படும் இழப்பு, குடும்ப உறுப்பினர்களின் பிரிவு, சிறுவர்களின் கல்வி பற்றிய கவனயீனம், சொந்த வீடு நோக்கிய ஏக்கம் ஆகியவை இடர்களாக தெரிவிக்கப்பட்டன. சட்டியூரைச் சேர்ந்த பெண்கள் கடல்பள்ளியை சேர்ந்த பெண்களை விட சிறிய குழுக்களாக குடிபெயர்வதால் அவர்களுக்கு எண்ணிக்கை அடிப்படையில் எப்போதும் பாதுகாப்பில்லை அதனால் அவர்கள் பணியாட்களினால் துன்புறுத்தல்களுக்கு ஆளாகக்கூடிய அச்சுறுத்தல் உள்ளது.

கிழக்கு கரையோர சமுதாயங்களைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் உள்நாட்டு பருவகால குடிப்பெயர்வின் மூலம் தங்களுக்கு பயன்கள் ஏதும் கிடைக்கப்பெறுவதில்லை என்றே கருதுகின்றதுகின்றனர். அவர்களைத் தவிர குடிபெயர்வாளர்களுக்கு அனுசரணை வழங்குவதன் மூலம் மீன் வர்த்தகர்கள் பெரிய இலாபத்தை ஈட்டிக்கொண்டார்கள். இடர்கள் பொருண்மிய அடிப்படையில் பார்க்கப்பட்டன. குடிபெயர்ந்து வருபவர்களினால் பாவிக்கப்படும் சட்டவிரோத மீன்பிடி உபகரணங்களும் முறைமைகளும், உள்ளூர் மீனவ குடும்பங்கள் எதிர்கொள்ளும் மீன்வளத்தினதும் வருமானத்தினதும் இழப்பு ஆகியவையே அவை. உறவுமுறை இடர்களாக குடிபெயர்ந்து வருபவர்களுக்கும் உள்ளூர் மக்களுக்குமிடையிலான முரண்பாடுகள், கடற்கரையும் கிணறுகளும் மாசுபடுதல், நோய்களும் விபச்சாரமும் பரவுதல் என்பன குறிப்பிடப்பட்டன.

உள்நாட்டு குடிப்பெயர்வு மேற்கு கரையோர குடிபெயரும் சமுதாயங்களுக்கு பரந்த பொருண்மிய, உறவுநிலை, அகவயமான பயன்களையும் இடர்களையும் கொண்டுவருகின்றது. ஆனாலும் கிழக்கு கரையோரத்தைச் சேர்ந்த இடமளிக்கும் சமுதாயங்கள் பயன்களை விட இடர்களை அதிகமாக பெறுவதாக உணர்ந்தனர். இரு கரையோரத்திலும் பெண்கள் உறவுநிலை இடர்களின் சுமைகளை அதிகமாக சுமக்கின்றனர். வெவ்வேறான பயன்களையும் இடர்களையும் பெறுகின்ற குடிபெயர்கின்ற, இடமளிக்கின்ற சமுதாயங்களுக்கிடையிலும் ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையிலும் நல்வாழ்வை தேடிக்கொள்வது தொடர்பாக நல்லிணக்கத்தை ஏற்படுத்திக்கொள்வது ஒரு சவாலாக நிலைக்கின்றது.

நிலைபேறுதகைமை தொடர்பான பிரச்சினைகளை விட கிடைக்கக்கூடிய மீன்பிடி வளங்களை பெற்றுக்கொள்வதில் நியாயம் தொடர்பாகவே மீனவ சமுதாயங்கள் அதிக கவனம் செலுத்துகின்றன.

### சமூக வலையமைப்புகள் (Social networks)



குடும்பங்கள், நண்பர்கள், அயலவர்கள் இடையிலான பிணைப்பினை அடிப்படையாகக் கொண்ட சமூக வலையமைப்புகள் இக்கட்டான உணர்வெழுச்சி சார்பான, நெருக்கடிநிலை ஆதரவை ஆய்வு நடாத்தப்பட்ட நான்கு கிராமங்களிலும் வழங்கின. ஆனாலும் சமூக வலையமைப்புகளிலிருந்தாலான வாழ்வாதார ஆதரவு கிழக்கு கரையோரத்தோடு ஒப்பிடுகையில் மேற்கு கரையோரத்தில் பலமானதாக காணப்பட்டது. சமுதாயத்திற்கு அப்பால் இணைப்புக்களை கொண்ட வர்த்தகர்கள், சமயத் தலைவர்கள் போன்ற பிணைப்பிடும், இணைப்பிடும் வலையமைப்புகளிலிருந்தாலான ஆதரவில் பால்நிலை சார்ந்து குறிப்பிட்டளவு வேறுபாடுகள் மேற்குகரையோரத்தில் காணப்படவில்லை.

ஆனாலும் கிழக்குக் கரையோரத்தில் இணைப்பிடும் வலையமைப்புகளிலிருந்து ஆண்களுக்கு கிடைக்கும் ஆதரவு பெண்களுக்கு கிடைப்பதைவிட அதிகமாக இருந்தது. கிழக்குக் கரையோர சமுதாயங்களிடமிருந்து, அதிகாரசபைகளிடமிருந்து வரும் எதிர்ப்பை தமது சார்பில் பேசித்தீர்ப்பதற்கு மேற்குக் கரையோர மீனவ சமூகத் தலைவர்கள் ஒழுங்காற்றுப்படுத்தும் அதிகாரசபைகளான மீன்பிடித் திணைக்களம், அரசியல்வாதிகள், தேவாலயம் ஆகியவற்றுடனான இணைப்புகளில் தங்கியுள்ளனர். அதேபோல் கிழக்குக் கரையோர மீனவ சமூக தலைவர்கள் உள்ளூர் அதிகாரசபைகளிடமிருந்தும் அரசியல்வாதிகளிடமிருந்தும் குடிப்பெயர்வை எதிர்கொள்வதற்கு குறைந்தளவான வெற்றியுடன் ஆதரவினை பெற்றுக்கொள்கிறனர். எனவே கிழக்குக் கரையோர மீனவ சமுதாயங்களை போலல்லாது மேற்குக் கரையோர மீனவ சமுதாயங்களில் காணப்படும் வலிமையான பிணைப்பிடும், பாலமிடும், இணைப்பிடும் வலையமைப்புகள் கரையோரத்திலிருந்து கரையோரத்திற்கான பருவகால மீன்பிடி குடிப்பெயர்வின் தொடர்ச்சியை இயலுமானதாக்குகின்றன.

## கொள்கைச் சூழமைவு

கரையோர மீன் வளங்களின் நிலைபேறுதகைமை இலங்கையின் மீன்பிடித் துறைக்கு மிகப் பெரிய சவாலாக அமைந்துள்ளது. தற்போதைய கரையோரத்தை அண்மித்த மீன்வள இருப்பு 1978-80 களில் இருந்த மீன்வள இருப்பின் ஐந்தில் ஒரு பகுதி என அண்மைய இருப்பு மதிப்பீட்டின் மூலம் தெரிய வந்துள்ளது. அதேவேளை இதே காலப்பகுதியில் மீனவ குடும்பங்களின் எண்ணிக்கை குறிப்பாக கிழக்கு, வட-கிழக்கு கரையோரத்தில் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளது. மீன்பிடித் துறை அதிகாரசபைகள் கிழக்கு கரையோரத்தில் குடிபெயர்ந்து வரும் படகுகளின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தியதுடன் சேதத்தை விளைவிக்கும் மீன்பிடி உபகரணங்கள் மீது கடுமையான கட்டுப்பாடுகளை விதித்தன. ஆய்வு நடாத்தப்பட்ட கிராமங்களிலுள்ள மீனவ சமுதாய உறுப்பினர்களின் கொள்கை உள்வாங்கல்கள் ஒப்பீட்டளவில் ஒடுங்கியதாக இருந்தன. "கடல் அனைவருக்கும் சொந்தம்" என்ற அடிப்படையிலமைந்த ஒரு தேசிய கொள்கையினால் மீன் வளங்கள் ஆட்சி செய்யப்படுவதாக முதலில் மீனவர்கள் நினைத்தார்கள். இரண்டாவதாக மீன் வளங்கள் தேய்வடைவதுடன் அதற்கான நிலைபேறான முகாமைத்துவம் தேவைப்படுகின்றது என மீனவர்கள் உள்ளுணர்ந்தாலும் சில மீன்பிடி உபகரணங்கள் மீதான தடையை அவர்கள் ஏற்றுக்கொள்ளாததோடு அத்தடைகள் செயற்றிறனோடு நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என அவர்கள் உள்ளுணர்கின்றனர். வெவ்வேறான மாவட்டங்களில் வெவ்வேறான மீன்பிடி உபகரணங்களுக்கான தடை தொடர்பான தெளிவின்மை, விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதில் நியாயப்பாடின்மை ஆகியனவே இறுதியாக இவ்வாறான உள்ளுணர்வுகளுக்கு காரணமாக அமைகின்றன. அதேபோல் குடிபெயர்ந்து வரும் படகுகளுக்கான ஒதுக்கீடுகள் இரு கரையோரங்களையும் சேர்ந்த மீனவர்களால் கேள்விக்குள்ளாக்கப்பட்டது. அக் கேள்விகள் படகுகளின் எண்ணிக்கை குறைவாக அல்லது அதிகளவாக இருக்கின்றமை தொடர்பாகவும் போதுமான அளவு கண்காணிப்பின்மை தொடர்பாகவும் இருந்தது.

மீன்பிடித்துறை கொள்கைச் சூழமைவு புதிய தேசிய மீன்பிடி, மீன்வளர்ப்பு கொள்கை - 2018 இனால் வரையப்படுகின்றது. விஞ்ஞானத்தின் அடிப்படையிலான தகவல் மூலம் வளங்களை நிலைபேறாக முகாமைத்துவம் செய்தல், வலய மற்றும் சர்வதேச கடப்பாடுகளுடன் இணங்குதல், அதிகரித்த கடல் மீன்பிடி உற்பத்தி, அதிகரித்த மீன் வளர்ப்பும் உள்நாட்டு மீன்பிடி உற்பத்தியும், மீன்பிடிக்கு பின்னரான இழப்புக்களை குறைத்தலும் அதிகரித்த பெறுமதி சேர்ப்பும், அதிகரித்த தனிநபர் மீன் நுகர்வும், அதிகரித்த ஏற்றுமதி வருமானம், மேம்படுத்தப்பட்ட ஓய்வுக்கான வாய்ப்புக்கள், வேலைவாய்ப்பினதும் முயற்சியாண்மைகளினதும் அபிவிருத்தி, மீனவ சமுதாயங்களுக்கான மேம்படுத்தப்பட்ட சமூக-பொருளாதார நிலைமைகள் ஆகியவையே இக் கொள்கையின் நோக்கங்களாக உள்ளடக்கப்பட்டுள்ளன. எனவே நிலைபேறான முகாமைத்துவம், அதிகரித்த உற்பத்தியும் நுகர்வும் முக்கிய முன்னுரிமைகளாகின்றன. கடல் மீன்பிடி, மீன் வளர்ப்பு, நுகர்வோரும் சந்தைகளும், நீல பொருளாதாரம், "மற்றைய பரப்புகள்" ஆகிய ஆறு கொள்கை விடயங்களில் சிறிய மட்ட மீனவர்கள் "மற்றைய பரப்புக்களில்" உள்ளடங்குகின்றனர்.

பெண்கள், ஆண்களின் சமமான பங்கேற்பையும் பால்நிலை பெரும்போக்கையும் ஊக்கப்படுத்துகின்றதும் 2018ம் ஆண்டு கொள்கையில் "மற்றைய பரப்புக்களில்" உள்ளடக்கப்பட்டதுமான பால்நிலை போன்ற விடயங்கள் இந்த ஆய்வுடன் தொடர்புபட்டது. மேலும் மனித உரிமைகளும் மீன்பிடி அமைப்புக்களும், பாரம்பரிய, குடிபெயரும், வாழ்க்கைப் பிழைப்பு, கலைத்துவ மீன்பிடி சமுதாயங்களினுடைய நிலத்துக்கானதும் நீருக்கானதும் மீன்பிடி வளங்களுக்கானதுமான உரிமைகளை மதித்தல் ஆகிய விடயங்கள் சமூக-பொருளாதார நிலைமைகள் என்ற பரப்புக்களுள் உள்ளடக்கப்பட்டுள்ளன. பெண்கள் உள்ளிட்ட மீனவர்களதும் மீன்பிடித் தொழிலாளர்களதும் சமூக நலன்புரி பாதுகாப்பை முன்னேற்றுதல் போன்ற விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. மீன்பிடி முகாமைத்துவ நடவடிக்கைகளை வரைதல், திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றில் மீன்பிடி சமுதாயங்களை ஈடுபடுத்தல் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் சிறிய மட்ட மீனவர்களின் உரிமைகளை முன்னேற்றகரமாக கைவரப் பெறுதலுடன் போதுமான வாழ்க்கைத்தர மட்டத்திற்கு உயர்த்தலும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனாலும் இவ்வாறான சமூக-பொருளாதார கொள்கைகளை அடைவதற்கான நிறுவனமய செயற்படுமுறைகள் இக் கொள்கையில் போதுமான வகையில் இணைக்கப்படவில்லையென்பதால் அது நிலைமாறும் அணுகுமுறையை கொண்டிருக்கவில்லை.

**நிலைமாறும் கொள்கைகள் "சமூக நிறுவனங்களை அடிமட்டத்திலிருந்து அவற்றை அகப்படுத்தல், நியாயமான இயல்புடையனவாக மாற்றியமைப்பதுடன் அதிகாரத்தையும் பொருளாதார வளங்களையும் மறுபகிர்வு செய்கின்றது" (UNRISD 2016).**

நிலைமாறும் கொள்கைகள் உலகளாவிய, மனித உரிமைகள் அணுகுமுறையின் அடிப்படையில் அகப்படுத்தல் தீர்வுகளையும் சமூக இயைபுத் தன்மையையும் ஊக்கப்படுத்துகின்றன. மேலும் அவை நிலைபேறான அபிவிருத்தியின் மூன்று தூண்களான பொருளாதார, சூழலியல், சமூக விடயங்களை ஒத்திசைவாக ஒன்றிணைக்கின்றன. அச்செயற்பாட்டில் முன்னர் சமநிலையற்ற நிலைமை இருந்ததை கருத்தில்கொண்டு சமூக, சூழலியல் நோக்கங்கள் பொருளாதார நோக்கங்களைவிட முன்னிலைப்படுத்தப்படுகின்றன. மேலும் தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டில் சமூக பங்காளர்களது சக்தியூட்டப்பட்ட பங்கேற்பை உறுதிசெய்கின்றது.

## கொள்கை பரிந்துரைகள்

குடிப்பெயர்வின் பயன்களும் இடர்களும் குடிபெயரும், இடமளிக்கும் சமுதாயங்களுக்கிடையிலும் ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையிலும் சமமாகப் பகிரப்படுவதில்லை என்பதையே "நகர்வில்: பால்நிலையும் இலங்கையின் நான்கு மீன்பிடி கிராமங்களில் குடிப்பெயர்வும்" என்ற இலங்கை ஆய்வின் முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன. மேலும் குடிபெயரும் மீனவர்களின் குடிப்பெயர்வு பாரம்பரியத்திற்கான உரிமையின் அடிப்படையில் அமைந்ததும் இடமளிக்கும் மீனவர்களது உள்ளூர் வளங்களின் மீதான உரிமையின் அடிப்படையில் அமைந்ததுமான வளங்களை பெற்றுக்கொள்வதற்கான போட்டிநிலை இவ் ஆய்வின் மூலம் வெளிப்படுத்தப்பட்டது. இந்தப் போட்டிநிலை இனம் அல்லது மதம் சார்ந்ததாக மாறக்கூடிய போக்கு ஏற்கனவே இருப்பதுடன் அதன் மீது கவனம்செலுத்தப்பட வேண்டியுள்ளது. மீன்பிடி வளங்கள் கிடைக்கப்பெறுவதில் நியாயமான தன்மையே முக்கிய கவனம்பெறும் விடயமாக இரு கரையோரங்களையும் சேர்ந்த மீனவர்களுக்கும் இருக்கின்றது. இந்த முடிவுகளினால் பெற்ற தெளிவின் அடிப்படையில் பின்வரும் விடயங்களை நாங்கள் பரிந்துரைக்கின்றோம்:

- அனைத்து குழுக்களுக்கும் பயன்களை அதிகரிப்பதற்கும் இடர்களை குறைப்பதற்கும் குடிபெயரும், இடமளிக்கும் சமுதாயங்களுக்கும் பெண்களுக்கும் ஆண்களுக்கும் குடிப்பெயர்வினால் கிடைக்கப்பெறும் பயன்களும் இடர்களும் ஒழுங்காக மதிப்பீடு செய்யப்பட்டு கண்காணிக்கப்படவேண்டும்.
- சேதம் விளைவிக்கக்கூடிய மீன்பிடி உபகரணங்கள் மீதான தடைகளின் அறிமுகத்திலும் நடைமுறைப்படுத்தலிலும் தெளிவும் வெளிப்படைத்தன்மையும் அதிகரிக்கப்படவேண்டும். எனவே தடைகள் ஒரு குழுவினருக்கு சார்பானதாக மற்றைய குழுவினரால் பார்க்கப்படாது.
- மற்றைய சமுதாயங்களினது உரிமைகளை பறிக்காத வகையில் பாரம்பரிய, குடிபெயரும், வாழ்க்கைப் பிழைப்பு, விளிம்புநிலை மீன்பிடி சமுதாயங்களினுடைய நிலத்துக்கானதும் நீருக்கானதும் மீன்பிடி வளங்களுக்கானதுமான உரிமைகளை மதிப்பளிப்பதற்கான செயற்படுமுறைமையை தேசிய மீன்பிடி, மீன் வளர்ப்பு கொள்கை அடையாளம்காணுதல்.
- அச்செயற்படு முறைமைகள் பயிற்சியளிக்கப்பட்ட வழிநடத்துபவர்கள் / மத்தியஸ்தர்களுடன் மீனவ சமுதாயங்களுடன் கலந்தாலோசிக்கப்பட வேண்டும்.
- மீன் வளங்களின் நிலைபேறுதகைமை, குடிபெயர்ந்து வசிக்கும் இடங்களில் குடிபெயரும் சமுதாயத்தினருக்கு போதுமான வாழ்க்கைத்தரத்தை உறுதிசெய்தல், கடற்கரைகளும் நிலப்பிரதேசங்களும் மாசடைவதையும் நிரம்புதலையும் தடுத்தல் ஆகியவற்றை தேசிய மீன்பிடி, மீன் வளர்ப்பு கொள்கையினால் பருவகால மீன்பிடி குடிப்பெயர்வை ஒழுங்குபடுத்தலில் கவன்செலுத்துதல் மூலம் செயற்படுத்தல்.

**மேலதிக தகவலுக்கு தொடர்புகொள்ள:**
**இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையம் (ICES)**
**2 கின்சி டெரஸ், கொழும்பு 8, இலங்கை**
**தொலைபேசி: +94-11-2685085/2677745/2698048**
**மின்னஞ்சல்: admin@ices.lk**
**இணையத்தளம்: www.ices.lk**

**நன்றியறிதல்**

இந்தச் செயற்பாடு "வறுமையிலிருந்து விடுபடுவதற்கான வழிவகையாக குடிப்பெயர்வும் கூட்டிணைவுகளும் / வலையமைப்புகளும்: ஆசியாவிலுள்ள மீனவ சமுதாயங்களின் பால்நிலையால் தீங்கிற்குள்ளாகக்கூடிய நிலையும் இயலுமைகளும்" என்ற செயற்றிட்டத்தின் பகுதியாகும். இச்செயற்றிட்டமானது நோர்வே ஆய்வு பேரவையினால் நிதியளிக்கப்பட்டு பேராசிரியர் ரக்ஹில்ட் லுண்ட் தலைமையில் ஆசிய தொழில்நுட்ப நிறுவகம் (தாய்லாந்து), இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையம் (இலங்கை), கிழக்கு அங்கிலியா பல்கலைக்கழகம் (ஐ.இ), ஆய்வு மற்றும் கிராமப்புற அபிவிருத்திக்கான கம்போடிய நிறுவகம், மீன்பிடி முகாமைத்துவ வள நிலையம் (இந்தியா) ஆகிய நிறுவனங்களைச் சேர்ந்த ஆய்வாளர்களின் கூட்டிணைவில் நடாத்தப்பட்டது.

© 2020 International Centre for Ethnic Studies. All rights reserved. This brief may be reproduced without the permission of, but with acknowledgment to, ICES.